முருகப்பெருமான் துணை

**மகான் குங்கிலியக் கலைய நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**06.12.2021**, திங்கட்கிழமை

1. தவமே தனிப்பெருங் கருணையே
தரணி வெல்ல அவதரித்த நல்
அவதாரமே ஆறுமுக அரங்கனே
அகிலமதில் உன்பெருமை கூறி
2. கூறியே துல்லிய ஆசி தனை
குறைவிலா பிலவ தேள் திங்கள்
இருபான் திகதி சோம வாரம்
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 20ம் நாள், 06.12.2021, திங்கட்கிழமை)
இயம்பிடுவேன் குங்கிலியக் கலைய நாயனார் யானும்
3. யானும் உலகோர் நலமுற உரைப்பேன்
உயிர்கொலை நீக்கி வாழ்ந்திட
ஞானம்தனை அருளும் அரங்கன்
நல்வழி மக்களெல்லாம் வந்திட
4. வந்திட கலி அரசன் தாக்கம்
வலுவிழந்து பாதுகாப்புமிக்கதாக
சிந்தை தெளிவூட்டும் வண்ணம்
சித்தியாக கீர்த்தியாக மலரும்
5. மலரும் ஞானிகள் தயவாக
மாதவராசன் சொன்ன வழி
வளரும் ஞானமாக தருமமாக
வையகம் வள்ளல் தன்மை கூடிட
6. கூடிட இந்தவித அற்புதம்
குவலயம் கண்டு தேறிட
தேடியே தேசிகன் வழிதனை
தெரிவிப்பேன் மக்கள் ஏற்கும்படி
7. ஏற்கும்படி செய்து நன்கு
எல்லாத் தேற்றமும் வழங்கிட
அற்புதம் கலியுகம் அடைந்து
ஆன்மீக ஞானயுகம் ஆகும்
8. ஆகவே அரங்கனை கொண்டு
ஆறுமுகப் பெருமானும் இனிதே
மிகைபட வளர்ச்சி பணிதனை
மேலான சேவையாக ஆற்றிட
9. ஆற்றல்பட அரங்க மகானை
அனைவரும் கண்டுவணங்கி
மாற்றம் தா என பூசையை
மகான்கள் பெயரில் தொடர

10. தொடர ஏற்றம் காணும்
தொடர ஞான மாற்றமாக
இடரை வெல்லும் சக்தியாக
இறங்கி உலக ஞானிகள் எல்லாம்

11. எல்லோரும் அரங்கன் சேவைக்கு
எல்லா சித்திகளும் வழங்கி
வல்லமைபட உலகமாற்றத்தை
வருமுலகில் சடுதி அரங்கன் புரிவார்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—